தமிழ்நாடு சட்டப்பேரவை

திங்கட்கிழமை, 1969 மார்ச் 10.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 246 முதல் 258 வரை பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

புத்தாம்பூர் குளம்

*259 வினா.—**திரு. பெ. சௌந்திரபாண்டியன் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் வட்டம் புத்தாம்பூர் குளத்தைப் புதுப்பித்துத் தர வேண்டும் என்று அப்பகுதி மக்களிடமிருந்து கோரிக்கை ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை. ஆயினும், புத்தாம்பூர் கிராமத்தின் அருகே ஓடும் காட்டாற்றின் குறுக்கே குளம் ஒன்றை வெட்டலாம் என்று புத்தாம்பூர் ஊராட்சித் தலைவர் திருச்சிராப்பள்ளி மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் கருத்துத் தெரிவித்தார்.

(இ) பாசனத் தலைமைப் பொறியாளர் ரூபாய் 68,500 செலவு மதிப்பீட்டில் வேலைத் திட்டம் ஒன்றைத் தயாரித்து அனுப்பினார். இதனை அரசாங்கம் பரிசீலித்தது. செலவிடும் பணத்திற்கேற்ப இது ஆதாயம் கிட்டாது. எனவே அரசாங்கம் இவ்வேலைத் திட்டத்தைத் தள்ளி வைத்தது.

காவிரியாற்றின் கரைகளைச் சீர்படுத்தல்.

*260 வினா—**திரு. வை. சுவாமிநாதன் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளியிலிருந்து தஞ்சாவூர் வரை காவேரி ஆற்றின் இரு கரைகளையும் பலப்படுத்தி சீர்படுத்த அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : திருச்சி முதல் தஞ்சாவூர் வரை காவிரி ஆற்றின் இரு கரைகளும் அப்பகுதியில் ஆற்றில் செல்லும் தண்ணீரைத் தாங்கும் வகையில் உறுதியாகவே உள்ளதால் அவற்றைத் தற்போது வலுப்படுத்தும் செயற்குறிப்பு எதும் இல்லை.

திரு. வை. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, தற்போது வலுவாக இருந்தபோதிலும் வெள்ளம் ஏற்பட்ட காலத்தில் அப்படிப்பட்ட கல்லணையில் உடைப்பு ஏற்பட்டது. ஆதலால் வருங்காலத்திலாவது வெள்ளம் வராமல் தடுப்பதற்கு அந்தக் கரைகளை பலப்படுத்தும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அப்படி ஒரு நிலை ஏற்படும் என்று அரசாங்கம் கருதினால் தக்க நடவடிக்கை எடுக்கும்.

திரு. கே. விநாயகம் : போன ஆண்டு 1968-வது ஆண்டு கிராண்ட் அணைக்கட்டில் உடைப்பு ஏற்பட்டு மூன்று நாட்கள் ஆகியும், வெள்ளத்தினால் ஏற்பட்ட சேதத்தினால் நிலங்கள் பாதிக்கப்பட்டு, உடனடியாக மெஷினரி இல்லாத காரணத்தினால், மண் அல்லது செமண்டு மூட்டைகளைக் கொண்டு வர முடியாமல் ரிப்பேர் செய்யாமலே போய்விட்ட அனுபவம் இருப்பதாலும், எவ்வளவு செலவானாலும் அந்தக் கரைகளை பலப்படுத்தி அதன் மீது செடிகளை வளர்த்து எப்போதுமே பிரீச்சஸ் ஏற்படாதபடி பார்த்துக் கொள்வதற்கு அரசாங்கத்திடம் என்ன திட்டம் இருக்கிறது ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கனவே கேட்ட கேள்விதான். அது கிராண்ட் அணைக்கட்டைப் பற்றியது. இக்கேள்வி காவிரியாற்றின் கரைகளைச் சீர்படுத்துவது பற்றியது. அணை என்ற உடன் கிராண்ட் அணைக்கட்டிற்குப் போய்விட்டீர்கள்.

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினரின் கேள்வி மூலக் கேள்வியோடு தொடர்பு உடையதாக எனக்குத் தெரியவில்லை.

திரு. என். கிட்டப்பா : மாயூரம் நகரத்திலே காவிரி ஆறு ஓடிக் கொண்டிருக்கிறது. மாயூரம் நகரப் பகுதியிலுள்ள காவிரியின் கரைகளை சேதப்படுத்துகின்ற அளவிற்கு அங்குள்ள மண்ணை வெட்டிக்கொண்டு செல்வதை தடுக்க வேண்டுமென்று பொதுப்பணித்துறையிடம் கடந்த 1½ ஆண்டுகளாக முறையிட்டும் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே அப்படிச் சேதம் ஆகாமல் தடுக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அது பற்றி பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்க முயற்சிக்கலாம்.

காவிரியாற்றின் குறுக்கே திருச்சிராப்பள்ளி அருகிலுள்ள பழைய பாலம்.

*261 வினா—திரு. வை. சுவாமிநாதன் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :—

திருச்சிராப்பள்ளியையும் சீரங்கத்தையும் இணைக்கும் பழைய காவேரி பாலத்தை அகலப்படுத்தும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : திருவரங்கத்தையும் திருச்சிராப்பள்ளியையும் இணைக்கும் பழைய காவிரி பாலத்தை அகலப் படுத்தும் செயற் குறிப்பு ஏதும் தற்போது இல்லை.

திரு. வை. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, திருச்சி-ஸ்ரீரங்கம் பாதை ஒற்றைப் பாதையாக இருப்பதால் பஸ்போக்குவரத்திற்கு நேரம் அதிகம் ஆகிறது. டிராபிக் போக்கு வரத்திற்கு சௌகரியப்படாமல் இருக்கிறது. திருச்சி செல்கிற பிரயாணிகளுக்கும் மற்ற நீண்ட தூரம் செல்கிற பிரயாணிகளுக்கும் வசதியாக இருக்கும் பொருட்டு இந்தப் பாதையை அகலப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மறு பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. பெ. மலைச்சாமி : இந்தப் பாலத்தை அகலப்படுத்தினால் எவ்வளவு செலவாகும் என்ற மதிப்பீட்டுத் தொகையைக் கூறுவார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இது பற்றிய குறிப்பு என்னிடத்தில் இல்லை.